**தலைப்பு – 320 இலங்கை தரைப் படை - சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தலைப்பு 320 – சிவில் பாதுபாப்புத் திணைக்களத்தின் நிதிப்பதிவேடுகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய பதிவேடுகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள், அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக்கணக்ககள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளில் மேற்கொள்ளப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 செப்தெம்பர் 18 ஆந் திகதி இலங்கை தரைப்படைத் தளபதிக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்தல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

இலங்கை தரைப்படைக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 17,531.71 மில்லியனாக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 16,987.66 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி, திணைக்களத்தின் தேறிய ஏற்பாடுகளில் சேமிப்பு ரூபா 544.06 மில்லியன் அல்லது 3 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருபவை | 17,213.64 | 16,677.19 | 536.45 | 3.11 |
| மூலதனம் | 318.06 | 310.46 | 7.59 | 2.51 |
| மொத்தம் | **17,531.71** | **16,987.66** | **544.04** | **3.10** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு**

பல்வேறு நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு வேறு திணைக்களத்தால் திணைக்களத்திற்கு ரூபா 141.88 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகள் மாற்றப்பட்டிருந்ததுடன் ரூபா 117.87 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகவே, செய்யப்பட்ட ஒதுக்கீட்டின் 16.92 சதவீதத்தைப் பிரதி நிதித்துவப்படுத்துகின்ற ரூபா 24 மில்லியன் தொகை செலவழிக்கப்படாமல் இருந்தது.

### 2.2. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லை**

விடய இல. 32001, இலங்கை சிவில் பாதுகாப்புத் திணக்களத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு தொடர்பில் பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதிகள் | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ள படியானது | இழிவு எல்லை | உள்ள படியானது | உச்ச எல்லை | உள்ள படியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 450.00 | 574.80 | 312.33 | 2,768.88 | 1,000.00 | 77.98 |

### 2.3 பொதுவைப்புக் கணக்கு

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் 02 வைப்புக் கணக்கின் மொத்த மீதிகள் ரூபா 303.78 மில்லியனாகும். விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இல. | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0002/0061/000 | 1.02 |
| 6000/0000/00/0018/0017/000 | 302.76 |
| மொத்தம் | 303.78 |

### 2.4 கட்டுநிதிக் கணக்கு

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் 7002/0000/00/0396/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் ரூபா 56,766 கூட்டுமொத்தத் தொகையான கட்டுநிதியின் மீதி நிலுவையாக இருந்தது.

### 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையின் 1.1 ஆம் பந்திகளில் காணப்படுகின்ற கணக்காய்வு அவதானிப்புகளிற்கு உட்படுத்தப்பட்டவை திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்படுகின்றது. முகாமைத்துவ

கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 3 ஆம் பந்திகளில் காணப்படுகின்றன.

## 3. விடயங்கள் மற்றும் குறிப்பிடத்தக்க கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1. பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

திணைக்களத்தின் நிலையான சொத்துப் பதிவேடுகளில் காட்டப்பட வேண்டுமென வேண்டப்பட்ட தகவல்கள் நாளதுவரையாக்கப்பட்ட வழியில் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2. வேறு திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட நிதிகளின் பயன்பாடு

(அ) மின் வேலிகளை உருவாக்குவதற்கு பாதுகாப்பு கொட்டகை நிர்மாணிக்கும் நோக்கத்திற்காக 2016 இல் வன வள பாதுகாப்பு திணைக்களத்தால் ரூபா 84.22 மில்லியன் கூட்டு மொத்தமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 83.18 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சனாதிபதி செயலகத்தால் பட்டியலிடப்பட்ட நிகழ்ச்சிதிட்டங்களை அமுலாக்குவதற்கு 001-2-6-2502 ஆம் கருத்திட்ட விடயத்திற்கு 2016 இல் ரூபா 7,663,875 கூட்டு மொத்தமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. அவற்றின் செயன்முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளன.

| நிகழ்ச்சித்திட்டம் | செய்யப்பட்ட ஏற்பாடு | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏற்பட்ட கிரயம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவழிக்கப்படாத தொகை |
|---|---|---|---|
| ‘‘மதின் நிடகாஸ் ரரக்க’’ மீதான தேசிய நிகழ்ச்சித்திட்டம் | 341,775 | 341,775 | - |
| மத்திய மாகாணத்தின் பஸ் போக்குவரத்து சேவையின் மீளமைப்பு மீதான முன்னோடி செயற்திட்டம் | 6,615,000 | 6,461,000 | 154,000 |
| குருநாகல் மற்றும் களுத்துறையில் ‘‘மதின் நிடகாஸ் ரரக்க’’ மீதான தேசிய நிகழ்ச்சித்திட்டம் | 707,100 | 461,500 | 245,600 |
| மொத்தம் | 7,663,875 | 7,264,275 | 399,600 |

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தின் சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையாக இருந்தது. கணக்காய்வு தெரிவுச் செவ்வையில் வெளிப்பட்ட பல கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) பிலியந்தலை பகுதியில் தனியார் நுழைவதற்கு ரூபா 1,658,375 கிரயத்தில் 2015 ஒக்தோபர் 22 இல் லான்ட் றோவர் மோட்டார் வாகனமொன்று திருத்துவதற்கான

ஒப்பந்தம் வழங்கப்பட்டது. வாகன பராமரிப்பிற்கான கட்டணங்களில் உத்தியோகத்தரால் சான்றுபடுத்தல் வழங்கப்பட்டிருக்காததுடன் உரிய மோட்டார் வானம் திருத்த வேலைகளை வெற்றிகரமாக பூர்த்தியாக்கிய பின்னர் 2016 மே 30 இல் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது என குறிப்பிட்டிருந்தார். எவ்வாறாயினும், உரிய மோட்டார் வாகனம் அலுவலக கடமைகளிற்காக விசுவமடு முகாமிற்கு இணைக்கப்பட்ட படையதிகாரி ஒருவருக்கு ஒதுக்கப்பட்டிருந்தது என 2016 மே மாதத்திற்காக வாகன ஓட்ட அட்டவணையின் பரிசோதனையில் வெளிப்பட்டது. 2016 மே 01 முதல் 31 வரை 3,960 கிலோ மீற்றர் ஓடியிருந்ததுடன் அவற்றிற்காக 514 லீற்றர் பயன்படுத்தப்பட்டிருந்தது என மேலும் வெளிப்பட்டது.

(ஆ) 2016 மே மாதத்தில் ஏற்பட்ட வெள்ளபாதிப்பு காலங்களின் போது அவசர நிவாரண குழுவினராக வேலைக்கமர்த்தப்பட்ட சிவில் பாதுகாப்பு குழுவின் உத்தியோகத்தரின் பாவனைக்காக 900 பயண மெத்தைகள் கொள்வனவு செய்வதற்கு அவசர அடிப்படையில் கேள்விகள் கோரப்பட்டிருந்தது. 900 பயண மெத்தைகள் கொள்வனவு செய்வதற்கு 07 நாட்களிற்குள் ஒப்பந்தத்தை பூர்த்தியாக்குவதற்கு குறைந்த வியையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கேள்வியை கருத்திற் கொள்ளாமல் 03 நாட்களிற்குள் ஒப்பந்தத்தை பூர்த்தியாக்குவதற்கான அடிப்படையில் உயர்ந்த விலையில் கேள்வி வழங்கப்பட்டிருந்தது. ஆகவே, 500 பெரிய மெத்தைகள் மற்றும் 400 சிறிய மெத்தைகள் கொள்வனவு செய்வதற்கு ரூபா 1.49 மில்லியன் கிரயத்தில் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 49 நாட்கள் தாமதத்துடன் பொருட்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் இதன்விளைவால் மெத்தைகள் அவசர நிலையின் கீழ் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. பின்னர், உரிய மெத்தைகள் வெலிசற, கெபியிகொல்லேவ, கட்டுநாயக்க, பொலநறுவை மற்றும் வென்னவத்தேயில் திணைக்களத்தின் முகாமில் அமைந்திருந்த களஞ்சியத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

(இ) திணக்களமானது ரூபா 49.04 மில்லியன் கிரயத்தில் 35,000 சோடி கன்வஸ் சப்பாத்துக்கள் கொள்வனவு செய்திருந்தது. ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம், 2016 செப்தெம்பர் 08 அல்லது அதற்கு முன்னர் வழங்கல் பூர்த்தியாக்கப்ட வேண்டும். எவ்வாறாயினும், 03 மாதங்களிற்கு மேலான தாமதங்களுடன் 16,525 சோடிச் சப்பாத்துக்கன் வழங்கப்பட்டிருந்தது. மேலும், திணக்களம் ஒப்பந்தம் கைசாத்திடுவதற்கு 02 நாட்களிற்கு முன்னர் 2016 ஏப்ரல் 09 இல் 5,000 சோடிச் சப்பாத்துக்கள் பெற்றிருந்தது. மேலும், ஒப்பந்தத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் உத்தரவாதம் 2016 ஒக்தோபர் 09 இலேயே காலாவதியாகியிருந்ததுடன் உத்தரவாத பிணைமுறியின் காலத்தை நீடிப்பதற்கு 2016 திசெம்பர் 08 வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தால் பதியப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்ற வழியில் செய்யப்பட்டிருந்தது. கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 8.9.1 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 500,000 அல்லது அதற்கு மேலான பெறுமதியுடைய பொருட்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவில் வழங்குநருடன் எழுத்து முல உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், பின்வரும் கொள்வனவுகளில் வழங்குநருடன் எழுத்து முல உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(i) மொறட்டுவை மொல்பேயில் திணைக்களத்தின் முகாமில் புதிய நிர்வாக தொகுதிக்காக உத்தேசிக்கப்பட்ட கட்டிடங்களின் கட்டம் - 01 இன் கீழான நிர்மாண வேலைகளின் நோக்கத்திற்காக ஒவ்வொன்றும் ரூபா 3,390 பெறுமதியுடைய 4’ X 8’ அளவில் 390 பிளைவூட் சீற்கள் தனியார்

தரப்பிலிருந்து ரூபா 1.47 மில்லியன் கிரயத்தில் (வற்றுடன்) கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் மொனறாகலையிலுள்ள முகாமிற்காக 13 குளிரூட்டி சாதனம் மற்றும் உபபாகங்கள் கொள்வனவு செய்வதற்கு ரூபா 1.14 மில்லியன் தொகை (வற் உள்ளடங்களாக) செலுத்தப்பட்டிருந்தது.

(iii) சகல முகாம்கள் மற்றும் திணைக்களத்தின் பயிற்சி நிலையங்களிற்காகவும் பயன்பாட்டிற்காகவும் ஒவ்வொன்றும் ரூபா 4,375 பெறுமதியில் 100 செ.மீ X 150 செ.மீ அளவில் 400 திணைக்கள கொடியின் கொள்வனவு ரூபா 1.75 மில்லியன் கிரயத்தில் தனியார் தரப்பிலிருந்து செய்யப்பட்டிருந்தது.

(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் 5.4.10 இன்படி, விளையாட்டு துறை பரிசளிப்பு விழாவொன்றிற்காக சீருடைகள் கொள்வனவு செய்வதற்கு ரூபா 2.37 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் வழங்குநரிடமிருந்து செயலாற்றல் பிணைமுறி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

2014 முதல் 2016 திசெம்பர் 31 வரை மோட்டார் வாகனங்களின் விபத்துக்கள் மீது நட்டங்களின் முற்கொண்டுவரப்பட்ட பெறுமதி ரூபா 179,820 ஆகும்.

**3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

கணக்காய்வு தெரிவுச் செவ்வையில் வெளிப்பட்ட சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) திணைக்களமானது சேவையிலுள்ள உத்தியோகத்தர்களிற்காக ரூபா 8.76 மில்லியன் கிரயத்தில் 60,000 பச்சை மற்றும் இயற்கை பெயர் பட்டிகள் கொள்வனவு செய்திருந்தது. எவ்வாறாயினும், கொள்வனவு செய்யப்பட்ட நேரத்தில் 18,153 பச்சை சின்னங்கள் மற்றும் 16,804 இயற்கை சின்னங்கள் என்பவற்றின் 38,819 இருப்புக்கள் திணைக்களத்தின் வென்னவத்தை களஞ்சியத்தில் இருப்பில் இருந்தது. ஆகவே, மிகையாக 17,319 சின்னங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதன்படி அவற்றின் மீது ரூபா 2.28 மில்லியன் மேலதிகமாக செலவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் 2015 மார்ச் 31 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்திலின் பிரகாரம், பொதுவாக 50 கிலோகிராம் பையொன்றின் ஆகக்கூடிய விலை ரூபா 870 ஆக நிர்ணயிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. எவ்வாறாயினும், திணைக்களத்தின் வலய அலுவலகங்கள் மற்றும் பயிற்சி நிலையங்களில் அமுலாக்கப்பட்ட செயற்திட்டங்களிற்காக 2,500 பைகள் சீமெந்து கொள்வனவு செய்வதற்கு கேரரப்பட்ட கேள்விகளிற்காக பெறப்பட்ட கேள்விகளில், ஒரு பையிற்கு ரூபா 990 விலை கோரியிருந்த வழங்குநர் தெரிவுசெய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 2.48 மில்லியன் செலுத்தப்பட்டது. ஆகவே, ஒரு பையின் ஆகக்கூடிய சில்லறை விலையுடன் ஒப்பிடும் போது ஒரு பை ஒன்றிற்கு ரூபா 120 ஆன மிகையான கொடுப்பனவு காரணமாக 2,500 பைகள் சீமெந்து கொள்வனவு செய்வதற்கு ரூபா 300,000 செலுத்தப்பட்டிருந்தது. மேலும், பெரியளவு 2500 சீமெந்து பைகள் கொள்வனவின் போது விலைக் கழிவுகள் பெறுவதற்கான சாத்தியத்திற்கான பேச்சுவார்த்தை கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், வழங்கல் கட்டளை 2015 நவம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டும். மேற்குறிப்பிட்ட திகதியில் உள்ளவாறு 1,370 சீமெந்து பைகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

**3.8. மனிதவளங்கள் முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகள் |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஸ்ட நிலை | 23 | 14 | 09 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 84 | 59 | 25 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 21 | 16 | 05 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 40,060 | 38,565 | 1,495 | - |
| (v) | ஏனையவை (அமைய / தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படை) | - | 09 | - | 09 |
| | மொத்தம் | 40,188 | 38,663 | 1,534 | 09 |